
## 40 ஆண்டுகளாக நீடிக்கும்
## கம்போங் சுங்கை பாரு மறுமேம்பாட்டுச் சர்ச்சைக்கு
# எப்போது தீர்வு?





கோலாலம்பூர், ஏப். 29-
கம்போங் சுங்கை பாரு மறுமேம்பாட்டுத் திட்டங்கள் 40 ஆண்டுகளுக்கு முன் முதன் முதலாகப் பரிந்துரை செய்யப்பட்டது. மலேசியத் தலைநகர் கோலாலம்பூரின் பிரதான ரியல் எஸ்டேட் மையப் பகுதியில் கம்போங் சுங்கை பாரு இருக்கிறது. அங்கு வசிப்பவர்கள், மேம்பாட்டாளர்கள், மத்திய அரசாங்கம் ஆகியவற்றுக்கு இடையில் தொடர்ந்து இந்தப் பிரச்சினை சர்ச்சைக்குரிய தாகவே நீடித்து வருகிறது. சட்ட சவால்கள், இழப்பீடு மீதான சர்ச்சைகள் தொடர்கின்றன. இருப்பினும் இந்த நகர்ப்புறப் புதுப்பிப்புத் திட்டத்தின் கீழ் மலாய் வரலாறு மறைந்து விடக்கூடாது என்று இங்கு வசிப்பவர்கள் போர்க்கொடி உயர்த்தி வருகின்றனர்.

பக்கம் 13

### முதல் பக்கத் தொடர்ச்சி
### 40 ஆண்டுகளாக நீடிக்கும்...

மேம்பாட்டாளர் தற்போது இங்குள்ள அடுக்கக வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கி வருகின்றனர். இந்நிலையில் டிபிகேஎல் எனப்படும் கோலாலம்பூர் மாநகர் மன்ற உத்தரவையும் மீறி சில குடியிருப்பாளர்கள் தங்களது வீடுகளைக் காலி செய்வதற்கு மறுத்து வருகின்றனர். மேம்பாட்டாளருக்குச் சாதகமாக உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அதனை எதிர்த்து மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் நாங்கள் வழக்குத் தொடுத்திருக்கிறோம். தீர்ப்பு வரும் வரையில் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் வெளியேற்று நடவடிக்கை உத்தரவு செல்லாது என்று அவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

இந்த மறு மேம்பாட்டுத் திட்டத்தில் 67 வரிசை வீடுகள், 14 அப்பார்ட்மெண்ட் தொகுதிகள் (பங்சாபுரி சுங்கை பாரு) சம்பந்தப்பட்டுள்ளன. இவை அம்பாங் - கோலாலம்பூர் நெடுஞ்சாலைக்குப் பக்கத்தில் உள்ளன. 108 சொத்து உரிமையாளர்களுள் பெரும்பான்மையினர் இந்த மறு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருப்பதோடு ஒரு சதுர அடிக்கு 400 ரிங்கிட் இழப்பீட்டுத் தொகையை ஏற்றுக் கொள்வதற்கு ஒப்புக் கொண்டுள்ளனர். சிறுபான்மையினர் மட்டுமே தங்களது சொத்துகளுக்கு மிகக்குறைந்த அளவில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது என்று விடாப்பிடியாக வாதம் செய்து வருகின்றனர். இந்த மறு மேம்பாட்டுத் திட்டத்தில் 64 வரிசை வீடுகள், 264 அடுக்குமாடி வீடுகள் சம்பந்தப்பட்டிருப்பதாக சில தரப்பினர் தெரிவிக்கின்றனர். கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா இழப்பீட்டுத் தொகையைத் தற்காத்துப் பேசியிருக்கிறார். அதேசமயம் மாற்று வீடுகள், வீடு மாறிச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகள், தற்காலிக வாடகை அலாவன்சுகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் டிபிகேஎல் இணங்கி இருக்கிறது என்று அவர் மேலும் சொன்னார்.